# கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் பெறுவனவுகள் ரூபா 477,415 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 525,010 தொகையான மீதியுடன் முன்கொண்டுவரப்பட்ட மொத்த மீதி ரூபா 1,002,425 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மீனவர்களால் கடலில் ஆற்றப்படும் தவறுகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கும் பறிமுதல் செய்யப்பட்ட மீன் மற்றும் தடை செய்யப்படாத பொருட்களை ஏலவிற்பனை செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தை வெகுமதி நிதியத்திற்குச் செலவு வைப்பதற்கும் அப்பணத்திலிருந்து சுற்றிவளைப்பில் கலந்து கொண்ட நபர்களுக்கு வெகுமதிகளைச் செலுத்துவதற்கும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எவ்வாறெனினும், முன்னைய ஆண்டின் போது முன்கொண்டுவரப்பட்ட ரூபா 525,010 தொகையும் மீளாய்வாண்டின் போது நிதியத்திற்குச் சேகரிக்கப்பட்ட ரூபா 477,115 தொகையுமாக ரூபா 1,002,425 கூட்டுத்தொகையான வருமானம் நிதியத்தில் காணப்பட்ட போதிலும் சுற்றிவளைப்பில் கலந்து கொண்ட நபர்களுக்கு வெகுமதியாக எந்தப் பணமும் மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்பட்டிராததுடன் 2010 ஆம் ஆண்டின் பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட தடை செய்யப்படாத பொருட்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டு வருமானம் வெகுமதி நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் அமுலிலுள்ள கட்டளைகளை மீறுவது தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் மீளாய்வாண்டின் போது தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 165 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் பேதான வழக்குகளின் எண்ணிக்கை 187 ஆகக் காணப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

மீளாய்வாண்டின் போது மீன்களை விற்பனை செய்வதன் மூலம் சேகரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 117,580 தொகையான வருமானத்தை நீதிமன்றத்திலிருந்து பெற்று வெகுமதி நிதியத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.